பக்கங்கள்:-23

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆவணி 19 | வியாழக்கிழமை | 04.09.2025 | அதிர்வு 34

## புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் வெளியீடு



2025 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று

03



- வெளிநாட்டு நிபுணத்துவம் அவசியம்
- நிதி, தொழில்நுட்ப வசதிகள் தேவை
- பொலிஸின் ஈடுபாட்டைத் தவிருங்கள்
- சாட்சிகள், ஊடகங்களை மிரட்டாதீர்
- இராணுவத்தின் தலையீடு வேண்டாம்
- தேசிய மரபணு வங்கியை ஏற்படுத்துக

# செம்மணி குறித்து 16 பரிந்துரைகளை மனித உரிமை ஆணையம் முன்வைப்பு

யாழ்ப்பாணத்தில் உள்ள செம்மணி மனிதப் புதைகுழி தளத்தில் நடைபெற்று வரும் விசாரணை குறித்த விரிவான அறிக்கையை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

06

# நேற்றும் 9 எலும்புக்கூடுகள் அடையாளம்

## இதுவரை 231 என்புத் தொகுதிகள் கண்டுபிடிப்பு

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்றைய அகழ்வின் போது 9 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியில் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 42ஆம் நாள் அகழ்வு யாழ். மேலதிக நீதிவான் செல்வநாயகம் லெனின்குமார் முன்னிலையில் நேற்று இடம்பெற்றது.

நேற்றைய அகழ்வின் போது

07






தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நண்பர் மனோ கணேசன் ஊடகவியலாளர் என்ற முறையில் எனக்கு தமக்கே உரிய அறச் சீற்றத்துடன் ஒரு செய்தியை அனுப்பி இருந்தார்.

தமிழர் தேசியப் பிரச்சினையை ஒட்டிய ஊடக விடயங்களில் எங்கள் மீது உரிமையுடன் கோபிப்பதற்கு ஒரு வகையில் அவர் உரித்துக் கொண்டவரும் கூடத்தான். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் 'முரசு' மின்னிதழ் வெளியாகத் தொடங்கிய போது, அதன் வெளியீட்டு நிகழ்வு அப்போது யாழ்ப்பாணம் கலாசார மண்டபம் என்று அழைக்கப்பட்ட – இப்போதைய யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் – நடைபெற்ற சமயம் அதில் பங்குபற்றுவதற்காகவே கொழும்பிலிருந்து வந்து, கலந்து கொண்டு வாழ்த்துரை நிகழ்த்தியவர் அவர். ஆகவே யாழ்ப்பாண ஊடகச் செயலாற்றுகை தொடர்பில் தமது மனதில் பட்ட குறையை அவர் வெளிப்படையாகச் சொல்வதற்கு உரிமை உள்ளவர் என்ற விடயத்தை ஏற்றுக்

06



# இலங்கை வந்தார் இத்தாலியின் வெளிவிவகார பிரதி அமைச்சர்

இத்தாலியின் வெளிவிவகார மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்கான பிரதி அமைச்சர் மரியா திரிபோடி உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று புதன்கிழமை மாலை இலங்கைக்கு வந்துள்ளார்.

இத்தாலியின் பிரதி அமைச்சர் மரியா திரிபோடி நாளை வெள்ளிக்கிழமை வரை இலங்கையில் தங்கியிருக்கவுள் ளார் என்று வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித் துள்ளது.

சுமார் ஒரு தசாப்த காலத்துக்குப் பின்னர் இத்தாலியில் இருந்து இலங்கைக்கு மேற்கொள்ளப்படும் மிக உயர்ந்த மட்ட விஜயமாக இந்த விஜயம் கருதப்படு கின்றது.

இந்த விஜயத்தின் போது, இலங்கை – இத்தாலி அரசியல் ஆலோசனைக ளின் ஆரம்ப அமர்வுக்கு வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர வுடன் இணைந்து இத்தாலியின் பிரதி அமைச்சர் திரிபோடி தலைமை தாங் குவார்.

இந்த விஜயத்தின் போது அரசியல் ஆலோசனை பொறிமுறையை நிறுவு வது குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்படவுள்ளது. இது இரு நாடுகளுக்கும் இடையிலான கலந்து ரையாடலுக்கான கட்டமைக்கப்பட்ட கட்டமைப்பை வழங்குகின்றது.

பிரதமர் ஹரிணி அமரசூரிய, வெளி விவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற் றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோருடனும் கலந்துரையாடல்களை நடத்த இத்தாலியின் பிரதி அமைச்சர் மரியா திரிபோடி திட்டமிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் 1952 இல் நிறு வப்பட்டன என்று வெளிநாட்டு அலு வல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# ஐ.தே.கவின் ஆண்டு விழா செப்டெம்பர் 21ஆம் திகதி

ஐக்கிய தேசியக் கட்சியின் 79 ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 6ஆம் திகதி இடம்பெற இருந்த நிலையில் அது ஒத்திவைக்கப்பட்டு, எதிர்வரும் 21ஆம் திகதி நடத்துவ தற்குக் கட்சியின் முகாமைத்துவக் குழு தீர்மானித்துள்ளது.

கொழும்பில் கூடிய கட்சியின் முகாமைத்துவக் குழு, கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவின் உடல் ஆரோக்கியத்தைக் கருத்தில்கொண்டு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது என்று கட்சியின் பொதுச் செயலாளர் தலதா அத்துகோரல தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப் பட்டுள்ள மருத்துவ ஆலோசனை மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கமைய இந்தத் தீர்மானத்துக்கு வந்ததாகவும் அவர் கூறினார்.

அதன் பிரகாரம் ஒத்திவைக்கப்பட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் 79ஆவது ஆண்டு நிறைவு விழாவை எதிர்வரும்




21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு லேக்ஹவுஸ் நிறுவனத்துக்கு அருகில் அமைந்துள்ள இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு மத்திய நிலை-யத்தில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கொழும்பில் பட்டப்பகலில் ரி - 56 ரக துப்பாக்கியால் சூடு

## இளைஞர் ஒருவர் படுகாயம்



கொழும்பு, மாளிகாவத்தை, ஜும்மா மஸ்ஜிட் வீதியில் நேற்றுப் பகல் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வர்த்தக நிலையம் ஒன்றில் இருந்த இளைஞரை இலக்கு வைத்து இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த இளைஞர் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மாளிகாவத்தை, ஜும்மா மஸ்ஜிட் வீதிக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத இருவரால் இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

ரி - 56 ரக துப்பாக்கியைப் பயன்படுத்தி இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இருதய நோய் காரணமாக 05 நாள் சிசு உயிரிழப்பு

இருதய நோய் காரணமாக பிறந்து 05 நாள்களேயான ஆண் சிசு ஒன்று உயிரிழந்துள்ளது.

சாந்தை, பண்டத்ரிப்பைச் சேர்ந்த ஜெயந்தன் வெனிஸ்ரலா என்ற தம்பதியினருக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் ஆண் குழந்தை ஒன்று பிறந்துள்ளது. ஆனாலும் மேற்படி சிசு கடந்த திங்கட்கிழமை உயிரிழந்துள்ளது.

இம் மரணம் தொடர்பில் யாழ் போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை இளவாலைப் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

பிரேத பரிசோதனையில் இதய வியாதி காரணமாக மரணம் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

# பலா மரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் முன்னாள் போராளி மகேந்தி சடலமாக மீட்பு!



முன்னாள் போராளி மகேந்தி என்பவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டானில் தனது குடும்பத்துடன் வசித்து வந்த 55 வயதுடைய இராமப்பிள்ளை கமலராசா (மகேந்தி) என்பவர் நேற்றுமுன்தினம் அவரது வீட்டுக்கு முன்பாகவுள்ள பலா மரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் இந்தியப் பயிற்சிப் பாசறையில் பயிற்சி பெற்றதுடன் பிற்காலத்தில் விடுதலைப்புலிகள் அமைப்பில் முக்கிய பொறுப்பு வகித்தார்.

சடலம் மீதான பிரேத பரிசோதனை யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று நடைபெற்றது.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## புலமைப்பரிசில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நள்ளிரவு வெளியாகியுள்ளன.

இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்துக்குள் (https://www.doenets.lk) சென்று பரீட்சை முடிவுகளைப் பார்வையிட முடியும்.

2025 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை கடந்த ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி நடைபெற்றது.

நாடு முழுவதும் 2 ஆயிரத்து 787 மையங்களில் புலமைப்பரிசில் பரீட்சை நடைபெற்றது.

இம்முறை புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 7 ஆயிரத்து 951 ஆகும்.

# 5 ஆயிரத்து 74 பேர் ஒரே நாளில் கைது!

இலங்கையில் ஒரே நாளில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 5 ஆயிரத்து 74 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகள், இராணுவத்தினர், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் 30 பேரும், சந்தேகத்தின் பேரில் 789 பேரும், பிடியாணை உத்தரவு பிறப்



பிக்கப்பட்ட 269 பேரும், திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 174 பேரும், மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 48 சாரதிகளும், கவனக்குறைவாக வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 27 சாரதிகளும், ஏனைய போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 3 ஆயிரத்து 727 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.



# விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ராஜிதவிடம் 5 மணிநேரம் வாக்குமூலம்

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் நேற்று வாக்குமூலம் வழங்கிய பின்னர் மீண்டும் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன ஊழல் தொடர்பான விசாரணை தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக நேற்று காலை இலஞ்சம், ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போது ராஜித சேனாரத்னவிடம் இருந்து 5 மணிநேரம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

வாக்குமூலம் வழங்கிய பின்னர் ராஜித சேனாரத்ன இலஞ்சம், ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் இருந்து மீண்டும் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பில் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் கடந்த மாதம் 29ஆம் திகதி காலை ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அதிகாரப் பரவலாக்கத்தை அரசு துரிதப்படுத்த வேண்டும்

## இராதாகிருஷ்ணன் எம்.பி. வலியுறுத்து



மாகாண சபைத் தேர்தல்களை நடத்த ஏதேனும் தடைகள் இருப்பின் அவற்றை நீக்கி அதிகாரப் பரவலாக்கத்தை அரசு துரிதப்படுத்த வேண்டும் என்று நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"மத்திய மாகாணத்தில் மாகாண சபை உறுப்பினர்கள் 58 பேர் செய்த பணி தனியொரு ஆளுநரின் கையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர் மூன்று மாவட்டங்களின் தேவைகளையும் கவனிக்க வேண்டியவராக உள்ளார். இதேபோல் ஏனைய 8 மாகாணங்களிலும் நிலைமை உள்ளது.

மாகாண சபைத் தேர்தல்களை நடத்த ஏதேனும் தடைகள் இருப்பின், அதனைத் தீர்த்து வைத்து அதிகாரப் பரவலாக்கத்தை அரசு துரிதப்படுத்த வேண்டும்.

ஆளுநர் என்ற தனி நபரால் பலரது பணிகளை மேற்கொள்ளும்போது தனி ஒருவரின் கீழ் பணியாற்றும் அரச அதிகாரிகளுக்குப் பாரிய பொறுப்புக்கள் உருவாகின்றன. மாகாண சபைகள் முடக்கப்பட்டுள்ளதால் கிராம மட்டத்தில் சில முடிவுகளை எடுப்பதில் தற்போது தடைகள் ஏற்பட்டுள்ளன.

பலரால் எடுக்கப்பட வேண்டிய சில முடிவுகள் ஒரு சிலரது கையில் குவிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாகவே சில முடிவுகளுக்குக் காலதாமதம் ஏற்படுகின்றது." – என்றார்.







# வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று “கிளீன் ஸ்ரீலங்கா” திட்டம்

**(கி.வசந்தன்)**

தூய்மை இலங்கை (கிளீன் ஸ்ரீலங்கா) திட்டத்துடன் இணைந்ததாக இம்மாதம் முதலாம் திகதி முதல் நான்காம் திகதி (இன்று) வரை அரச நிறுவனங்களின் தூய்மைப்படுத்தும் செயிரி வாரம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்ட செயலகத்தைச் சுத்தம் செய்யும் பணி நேற்று நடைபெற்றது.

வவுனியாமாவட்டசெயலாளர்பி.ஏ.சரத் சந்திர மற்றும் மேலதிக மாவட்ட செயலாளர் என்.கமலதாசன் ஆகியோரும் இதில் பங்கேற்றனர்.

மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள அனைத்துப் பிரிவுகளும் தூய்மையான இலங்கைத் திட்டத்துடன் இணைந்து நடைபெற்ற இந்தப் பணியில் இணைந்தன.









## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொண்டு இனி விவகாரத்துக்குள் நுழைக் கிறேன்.

"யாழ்ப்பாணத்தில் குடிவரவு, குடிய கல்வு அலுவலகம் திறத்தல், யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் மின் நூலகத்தை ஆரம்பித்தல் உள்ளிட்ட பொருளாதார மேம்பாட்டு திட்டங்கள் தொடங்கப்பட்டி ருப்பது பாராட்டத்தக்கது என்றாலும் ஜனா திபதி அநுர குமார திஸநாயக்கவின் யாழ் வருகையின்போது அவரிடம் மாகாண சபை தேர்தல்கள், புதிய அரசமைப்பு உருவாக்கம், பயங்கரவாத தடைச் சட்ட நீக்கம் மற்றும் அரசியல் கைதிகள் விடு தலை ஆகியன குறித்து முக்கியமான கேள்விகளை உள்ளூர் ஊடகவியலா ளர்கள் எழுப்பாதமை ஆச்சரியமாக இருக்கின்றது" - என்று அவர் அந்தக் குறிப்பில் விசனத்துடன் சுட்டிக்காட்டி இருந்தார்.

"ஊடகங்கள் சமூகத்தைப் பிரதி பலிப்பதால் யாழ்ப்பாணத்தில் இந்த பிரச்சினைகள் இனி முக்கியமில்லை போலும் என்று தோன்றுகின்றது. ஆனால் அவை தெற்கில் இன்னும் - இன் னும் - முக்கிய விடயங்களாகவே இருக்கின் றன" என்ற சாரப்பட மனோ கணேசனின் அந்தக் குறிப்பு இருந்தது.

உண்மைதான். ஜனாதிபதியின் வடபகுதி வருகையின் போது அவரிட மிருந்து மாகாண சபை தேர்தல்கள், புதிய அரசமைப்பு உருவாக்கம், பயங்கர வாதத் தடைச் சட்ட நீக்கம், அரசியல் கைதிகள் விடுவிப்பு ஆகியவை குறித்து முக்கியமான அறிவிப்புகள் வரும் என்று வடக்கு மக்கள் எதிர்பார்த்துதான் காத்தி ருந்தார்கள் - நாங்களும் உட்பட.

மாகாண சபை தேர்தல் குறித்து தமது வடக்கு விஜயத்தின் போது ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க திட்டவட்டமான அறிவிப்பை வெளியிட வேண்டும் என்று ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் பகிரங்க அறிக்கை ஒன்று கூட வெளியிட்டு இருந்தார்.

ஆனால் ஜனாதிபதி இது பற்றி எல்லாம் பேசவில்லை. ஊடகவியலாளர்கள் மீது - அதுவும் வடக்கில் உள்ளூர் ஊட கவியலாளர்கள் மீது - மனோ கணேசனும் மற்றவர்களும் இதற்காகக் கொதிப்பதில் பயனில்லை. எந்த ஊடகவியலாளரையும் ஜனாதிபதியை நெருங்க அனுமதிக்க வில்லை. அவராகப் பொது மேடையில் பேசியவற்றைக் கேட்டு மக்களுக்கு கொடுப் பதை தவிர, ஊடகவியலாளர்களுக்கு அதற்கு மேல் வாய்ப்பு வடக்கில் வழங்கப் படவில்லை. பெரும்பாலும் கொழும் புக்கு வெளியில் ஜனாதிபதியின் விஜயத் தின் போதும் பெரும்பாலும் இதுதான் நிலைமை.

வடக்கு ஊடகவியலாளருக்கு ஒரு பத்து நிமிட நேர வாய்ப்பு கொடுத்தால் கூட இந்த விடயங்களை அவர்கள் நிச்சயம் ஜனாதிபதியிடம் பிய்த்து உதறி இருப் பார்கள். அது புரிந்துதானோ என்னவோ ஊடகவியலாளர்களை ஜனாதிபதிக்கு கிட்ட நெருங்க அனுமதிக்கவில்லை. தமக்கு மனதில் பட்டதை மாத்திரம் ஜனா திபதி வடக்கு மக்களுக்கு கூற வாய்ப்பு அளிக்கப்பட்டதே தவிர, மக்கள் சார்பில் அவரிடம் எதுவும் கேட்கவோ, பேசவோ - அவரது நெருக்கமான சகாக்களான அரசியல் தலைவர்களைத் தவிர மற்ற வர்களுக்கும் இடமளிக்கப்படவில்லை.

ரணில் விக்கிரமசிங்க வடக்கே வரும் போது மாத்திரம் சில சமயங்களில் பத்தி ரிகையாளர்களோடு உரையாட வாய்ப்பு வழங்கப்பட்டது. வடக்கின் மூத்த ஊடகவிய லாளர்களோடு கூட இந்த ஜனாதிபதிக்கு ஊடாட்டம் இருப்பதாக எனக்கு தெரிய வில்லை. பிரேமதாஸ காலத்தில் இருந்து ஜனாதிபதிகளாக இருந்தவர்கள் வடக்கின் மூத்த ஊடகவியலாளர்களோடு கூட தனிப் பட்ட தொடர்பாடல் வைத்திருந்தார்கள்.

நானே ஜனாதிபதிகள் பிரேமதாஸ, சந்திரிகா, ரணில் விக்கிரமசிங்க போன் றவர்களோடு பல தடவைகள் தனித்துச் சந்தித்துப் பேசித் தமிழர் தரப்பு கருத்துக் களை அவர்களோடு உரையாடி இருக்கி றேன்.

மைத்திரிபால சிறிசேன, அனுரா குமார திஸநாயக்க போன்றோரிடம் அத் தகைய தொடர்பாடல் இருக்கவில்லை. வடக்கில் தகுதியான - இல்லை, இல்லை, குறைந்தபட்சம் சர்ச்சைக்குரிய - ஊடகவிய லாளர்கள் தன்னும் இருக்கின்றார்கள் என்று அவர்களுக்குத் தெரியுமோ என் னவோ தெரியவில்லை.

ஆகவே பற்றி எரியும் தற்போதைய நெருக்கடிகள் குறித்து ஜனாதிபதியிடம் வடக்கு ஊடகவியலாளர்கள் எதுவும் கேட்கவில்லை அல்லது கேட்டு எழுத வில்லை என்று ஊடகவியலாளர்கள் மீது குற்றம் சுமத்துவதில் அர்த்தம் இல்லை.

\+ \+ \+

செம்மணி மனிதப் புதைகுழி விவகா ரம் தொடர்பில் இலங்கையின் தேசிய மனித உரிமைகள் ஆணையம் வைத் திருக்கும் 16 பரிந்துரைகளில் ஒன்று கவனிக்கத்தக்கது.

செம்மணி மனிதப் புதைக்குழி விடயம் கடந்த தவணை நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது பாதிக்கப்பட்டவர்கள் தரப்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரன் இருவரும் ஒரு விடயத்தை நீதிமன்றுக் குச் சுட்டிக்காட்டி இருந்தனர்.

இந்த விவகாரம் தொடர்பில் பாதிக் கப்பட்ட தரப்புகளாக வாக்குமூலம் அளிக் கவும், சான்றுகளை அடையாளம் காட்ட வும், சாட்சியங்களைப் பதியவும் என வரும் பொதுமக்கள் அப்பகுதியில் இருக் கும் குற்றப்புலனாய்வு பிரிவினர் மற்றும் பொலிஸாரினால் அச்சுறுத்தப்படுகின்ற னர் என்று அவர்கள் இருவரும் மன்றில் சுட்டிக் காட்டி இருந்தனர். அவற்றின் விவ ரங்களையும் நீதிமன்றத்தில் தெரிவித் திருந்தனர்.

இப்போது மனித உரிமைகள் ஆணை யம் வழங்கிய பரிந்துரைகளிலும் இந்த விடயமும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சம் பந்தப்பட்ட பொலிஸ் தரப்பினரை அந் தப் பகுதியிலிருந்து அகற்றுவது உட்பட பல விடயங்களை மனித உரிமைகள் ஆணையம் சுட்டிக்காட்டி இருக்கின்றது.

---

## செம்மணி குறித்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதில் செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான விசாரணையில் பொறுப் புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன் மையை உறுதி செய்வதற்கு வலுவான நட வடிக்கைகளை எடுக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணையம் வலியுறுத் தியுள்ளது.

இந்த அறிக்கையில், புதைகுழி அகழ் வின் முன்னேற்றம் மற்றும் குறிப்பிடத் தக்க சவால்கள் எடுத்துக்காட்டப்பட்டுள் ளன.

நீதி அமைச்சர், பொலிஸ்மா அதிபர், பாதுகாப்பு அமைச்சர், இராணுவத் தள பதி, உயர்கல்வி அமைச்சர், நிதி அமைச் சர் ஆகியோருக்குப் புதைகுழி அகழ்வு தொடர்பில் 16 பரிந்துரைகளும் முன்வைக் கப்பட்டுள்ளன.

கடந்த ஓகஸ்ட் 3 மற்றும் 4 ஆம் திகதி களில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் நடத்தப்பட்ட உண்மை யைக் கண்டறியும் பணியில், புதைகுழி தளம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் தின் தடயவியல் மருத்துவத் துறை மற் றும் காணாமல்போனோர் அலுவலகம், நீதிவான்கள், தடயவியல் நிபுணர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் காணா மல்போனவர்களின் குடும்ப உறுப்பி னர்களுடன் சந்திப்புகள் இடம்பெற்றன.

அறிக்கையிடும் காலப் பகுதியில், 200 இற்கும் மேற்பட்ட மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. முதற்கட்ட கண்டுபிடிப் புகள் 90 வீதத்துக்கும் மேற்பட்ட உடலங் கள் ஆடைகள் இல்லாமல் ஆழமற்ற குழிகளில் புதைக்கப்பட்டுள்ளன. சாத்தி யமான - நீதிக்குப் புறம்பான கொலைக ளைக் குறிக்கும் வகையில் புதைக்கப் பட்டிருந்தன என்பதைக் காட்டுகின்றன என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

புதைகுழி அகழும் விடயத்தில் நிபுணத் துவம், நிதி மற்றும் தொழில்நுட்பத்தில் உள்ள இடைவெளிகளை ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

வழக்கமான பொலிஸாரின் தொடர்ச் சியான ஈடுபாடு முடிவைப் பாதிக்கக்கூடும் என்று அது எச்சரித்துள்ளது.

கடுமையான குற்றங்களை விசாரிப் பதற்கு ஒரு சுயாதீன அலுவலகத்தை நிறுவுதல், மரபணுப் பகுப்பாய்வு மற்றும் காலத்தைக் கணிக்கும் கார்பன் டேட்டிங் ஆகியவற்றுக்கான வெளிநாட்டு நிபுணத் துவத்தைப் பெறுதல் மற்றும் காணா மல்போனவர்களின் குடும்பங்களுக்கு ஒரு தேசிய மரபணு வங்கியை உருவாக் குதல் ஆகியவற்றை ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

சாட்சிகள் மற்றும் ஊடகங்களை அச் சுறுத்துவதைத் தவிர்க்குமாறு பொலிஸா ரையும், விசாரணையில் தலையிடுவதைத் தவிர்க்குமாறு இலங்கை இராணுவத்தை யும் அது கேட்டுக்கொண்டுள்ளது.

சிலநிறுவனநிறுவனங்கள்அர்ப்பணிப் புடன் செயற்பட்டாலும், பாதிக்கப்பட்டவர் களுக்கும் அவர்களது குடும்பங்களுக் கும் நீதியை உறுதி செய்வதற்காக முறையான இடைவெளிகளை நிவர்த்தி செய்ய வேண்டும் என்றும் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

போதுமான தடயவியல், மானுடவி யல் மற்றும் தொல்பொருள் நிபுணர்கள் இல்லாதமை, மேம்பட்ட கார்பன் டேட்டிங் முறைகளுக்கான வரையறுக்கப்பட்ட அணுகல் மற்றும் மரபணு பகுப்பாய்வில் உள்ள சவால்கள் உள்ளிட்ட நிபுணத்து வம் மற்றும் தொழில்நுட்பத்தில் முக்கிய இடைவெளிகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அறிக்கை அடையாளம் கண்டுள்ளது.

நிதியுதவியில் தாமதங்கள் மற்றும் சட்ட அமுலாக்க அதிகாரிகளால் ஏற்படும் மிரட்டல்கள், பொறுப்புக்கூறல் மற்றும் ஊடக சுதந்திரம் குறித்தும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கவலை களை எழுப்பியுள்ளது.



# 18 புதிய மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு நியமனக் கடிதம் வழங்கிய ஜனாதிபதி

18 புதிய மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு நேற்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நியமனக் கடிதங்களை வழங்கி வைத்தார்.

இலங்கை ஜனநாயகக் சோசலிசக் குடியரசின் அரசமைப்பின் 111 ஆவது அரசமைப்பின் 2 ஆவது உப பிரிவின்படி பிரகாரம் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட 18 புதிய மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

விசேட தர நீதித்துறை அதிகாரிகள் 17 பேரும் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தில் பணியாற்றும் சிரேஷ்ட அரசதரப்பு சட்டத்தரணி ஒருவரும் இவ்வாறு மேல் நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

எஸ்.எஸ்.கே. விதான, ஏ.எம்.ஐ.எஸ். அத்தநாயக்க, ஏ.எம்.எம். ரியால், டீ.பீ. முதுங்கொடுவ, எஸ்.பி.எச்.எம்.எஸ். ஹேரத், ஜே.கஜனிதீபாலன், டி.எம்.டி.சி. பண்டார, எச்.எம்.பி.ஆர். விஜேரத்ன, டி.எம்.ஏ. செனவிரத்ன, ஏ.ஏ. ஆனந்தராஜா, ஜி.என். பெரேரா, ஏ. ஜூடேசன், டபிள்யூ.கே.டி.எஸ். வீரதுங்க, ஆர்.பி.எம். டி.ஆர். வெலிகொடபிடிய, கே.டி.என்.வி. லங்காபுர, டி.எம்.ஆர்.டி. திஸாநாயக்க, எம்.ஐ.எம். ரிஸ்வி, ஏ. ஜெயலக்ஷி டி சில்வா ஆகியோரே மேல் நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

(மற்றொரு செய்தி 17ஆம் பக்கத்தில்...)

# லஞ்சம் மற்றும் ஊழல் சம்பவங்கள் தொடர்பில் அறிவிப்பதற்கு ‘வட்ஸப்’ இலக்கம் அறிமுகம்

லஞ்சம் அல்லது ஊழல் சம்பவங்கள் தொடர்பில் தகவல் வழங்குவதற்காக “வட்ஸப்“ இலக்கம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு இந்த “வட்ஸப்“ இலக்கத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பான தகவல்களை 077 777 1954 என்ற இலக்கத்தின் ஊடாக வழங்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.




## நேற்றும் 9 எலும்புக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

9 மனித என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன் மூலம் செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள மனித என்புத் தொகுதிகளின் எண்ணிக்கை 231ஆக அதிகரித்துள்ளது.

மேலும் ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட 7 மனித என்புத் தொகுதிகள் நேற்று அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் செம்மணி புதைகுழியில் இருந்து இதுவரை 213 மனித என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.














# கர்ப்பிணிப் பெண்களுக்கான உதவித் திட்டம்

**(கி.வசந்தன்)**

வவுனியாவில் கர்ப்பிணிப் பெண்களுக்கான உதவித் திட்டம் நேற்று வழங்கி வைக்கப்பட்டது.

“பெரெண்டினா லயிப் லைன் வேலைத் திட்டம் - 2025“ இன் கீழ் அதன் நிதி அனுசரணையில் வவுனியா பிரதேச செயலக மகளிர் பிரிவால் சமுர்த்தி அபிவித்தி வள நிலையத்தில் வைத்து இந்த உதவித் திட்டம் வழங்கி வைக்கப்பட்டது.

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 34 கர்ப்பிணித் தாய்மாருக்கு இந்த உதவித் திட்டம் வழங்கி வைக்கப்பட்டது.

இதில் உதவிப் பிரதேச செயலாளர் கு.உமாநந்தனி, மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர், பெரெண்டினா லயிப் லைன் இன் வவுனியா மாவட்ட முகாமையாளர் மற்றும் பணியாளர்கள், கர்ப்பிணித் தாய்மார் எனப் பலரும் கலந்துகொண்டனர்.









நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## அரசின் பதில் என்ன?

'கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன், வானம் ஏறி வைகுண்டம் போவேன் என்றானாம்' என்பார்கள். அந்த மாதிரி இருக்கின்றது செம்மணி மனிதப் புதைகுழி விடயத்தில் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும் என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரர் அடித்துக் கூறியிருக்கின்ற கருத்து.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச நியமங்களுக்கு அமைவான சட்ட விசாரணைகளை நடத்தி, உண்மைகளை கண்டறிந்து, பொறுப்புக் கூறலை நடைமுறைப் படுத்தி, நீதியை இலைநாட்டி, குற்றம் இழைத்தோரைத் தண்டித்து, மீள நிகழாமையை உறுதிப்படுத்த வேண்டும் என்று இலங்கைக்கு கடந்த 16 ஆண்டுகளுக்கு மேலாக - யுத்தம் முடிவடைந்த காலத்தில் இருந்து - சர்வதேச சமூகம் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகின்றது.

இந்த விடயத்தில் இலங்கைப் படைகளுக்கு எதிராக குற்ற விசாரணை நடத்துவதற்கு தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசு உட்பட எந்த பௌத்த - சிங்களப் பேரினவாத அரசும் தயார் இல்லை என்பது வெளிப்படையானத.

யுத்த காலத்தில் இடம்பெற்ற விடயங்களை மூடி மறைத்துக்கொண்டு, நீதி நிலைநாட்டப்படுவதாக பௌத்த - சிங்களப் பேரினவாத அரசுகள் நடிக்கின்றன. ஆளுந்தரப்பைப் பொறுத்தவரை அத்தகைய நடிப்பு விவகாரத்துக்குள் வருகின்ற விடயம்தான் செம்மணி. அந்த செம்மணிப் புதைகுழி தொடர்பில் நீதி கிடைக்கும் என்று சந்திரசேகரர் வாய்ப்பந்தல் போடுகிறார்.

செம்மணிப் புதைகுழி விடயத்தில் அதனுடைய அகழ்வுக்கு ஏதோ தங்களுடைய அரசு வெட்டிப் பிடுங்கிச் சாதித்து விட்டதாக வேறு அவர் கதை அளக்கின்றார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு, வெளிநாட்டில் இருந்து செயற்படுகின்ற கட்டமைப்பு அல்ல. இலங்கையின் தேசியக் கட்டமைப்பு. நாட்டின் செயற்பாட்டில் அது ஒரு முக்கிய அங்கம். செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பாக நேரடி அவதானிப்பு அறிக்கையொன்றை மிக விரிவாக வெளியிட்டு இருக்கின்றது அது.

செம்மணிப் புதை கூலி விடயத்தில் தங்கள் அரசு நீதி கிடைக்கச் செய்யும் என்று அமைச்சர் சந்திரசேகரர் அடித்து முழங்கிய அதே சமயத்தில்தான் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செம்மணி பற்றிய அவதானிப்பு அறிக்கையும் வந்திருக்கின்றது.

இவ்விடயத்தில் நீதி நிலைநாட்டப் படுவதற்கு செய்யப்பட வேண்டிய 16 விடயங்களை விரிவாக - விஸ்தாரமாக - ஆணைக்குழு பட்டியலிட்டிருக்கின்றது.

செம்மணி புதைகுழி விடயத்தில் நீதியைக் கிடைக்கச் செய்வதற்கு தமது அரசு வெட்டிப் பிடுங்கும் என்று முழங்கிய அமைச்சர் சந்திரசேகரர், இப்போது அந்த நீதியை பெறுவதற்கு என்ன அடிப்படைகள் செய்யப்பட வேண்டும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணையம் பட்டியலிட்டுள்ள 16 விடயங்கள் தொடர்பில் - அவற்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் - விரைந்து செயல்படுத்துவது தொடர்பில் - என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதை வெளிப்படையாக இயன்ற விரைவில் அறிவிப்பாராயின் அது நல்லது.

சர்வதேச தொழில்நுட்ப உதவி உட்பட பல்வேறு விடயங்களை தேசிய மனித உரிமைகள் ஆணையம் இவ்விவகாரத்தில் நீதி கிடைப்பதற்கான பரிந்துரைகளாக முன் வைத்திருக்கின்றது.

அமைச்சர் சந்திரசேகரர் இந்த 16 விடயங்களிலும் தமது ஜனாதிபதியும் தமது அரசும் என்ன நடவடிக்கை எடுக்க போகின்றனர் என்பதை தமிழ் மக்களுக்கு இயன்ற விரைவில் விளக்கமாக தெளிவு படுத்தினால் நல்லது.

# மருந்துகளுக்கு புதிய விலைச்சூத்திரம் இம்மாதம் முதல் அமுல்படுத்தப்படும்



மருந்துகளுக்கான புதிய விலைச்சூத்திரம் இந்த மாதம் முதல் அமுல்படுத்தப்படவுள்ளது.

சுகாதார பிரதியமைச்சர் ஹங்சக விஜேமுனி இதனைத் தெரிவித்தார்.

புதிய விலைச்சூத்திரத்தை செயற்படுத்துவதன் மூலம் ஒரே மருந்தை பல்வேறு விலைகளின் கீழ் விற்பனை செய்ய எவருக்கும் இடமளிக்கப்படாது என அவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கான பயணிகள் சேவையை மீள ஆரம்பிக்கும் குவைத் ஏயார்வேஸ்




இலங்கைக்குப் பயணிகள் விமானங்களை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக குவைத் ஏயார்வேஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

அதன்படி, எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி முதல் இந்த சேவையை மீள ஆரம்பிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குவைத்தின் தேசிய விமான சேவைகள் ஞாயிறு, புதன், வியாழன், மற்றும் வெள்ளிக்கிழமைகளில் முன்னெடுக்கப்படுகிறது.

இந்த நிலையில், பயணிகளின் வசதி கருதி இலங்கைக்கான விமானங்களை மீண்டும் இயக்க தீர்மானித்துள்ளதாக குவைத் ஏர்வேஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

# குற்றங்களுடன் தொடர்புடைய 17 பேர் நாட்டுக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர்

இந்தோனேசியாவில் சமீபத்தில் கைது செய்யப்பட்ட 05 பாதாள உலக நபர்கள் உட்பட 17 ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் இந்த ஆண்டில் இதுவரை இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர் என பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

இலங்கை பொலிஸின் 159 ஆவது ஆண்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்த ஆண்டு இதுவரையான காலப் பகுதியில் ரி 56 துப்பாக்கிகள் மற்றும் கைத்துப்பாக்கிகள் உட்பட 1,612 சட்டவிரோத ஆயுதங்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் எனவும் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.





# ஐரோப்பிய ஒன்றியத்துடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம்

## ஜெய்சங்கர் நம்பிக்கை

ஐரோப்பிய ஒன்றியத்துடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் விரைவில் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வர வேண்டும் என்பதை இந்தியா விரும்புகிறது என வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இந்தியா வந்துள்ள ஜேர்மனி வெளியறவு அமைச்சர் ஜோஹன் வதேபுல் உடன் டில்லியில் பேச்சுவார்த்தை நடத்திய ஜெய்சங்கர், பின்னர் அவருடன் இணைந்து செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது ஜெய்சங்கர் தெரிவிக்கையில்,

“காலநிலை மாற்றம், பாதுகாப்பு, தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது தொடர்பாக ஜேர்மனி வெளியுறவு அமைச்சர் ஜோஹன் வதேபுல் உடன் பேச்சுவார்த்தை நடத்தினேன்.

இந்தியா உடனான வர்த்தகத்தை இரட்டிப்பாக்க வேண்டும் என்ற ஜேர்மனியின் நோக்கத்தை நாங்கள் பாராட்டுகிறோம். மேலும், ஏற்றுமதி கட்டுப்பாடுகள் பிரச்சினைகளை நிவர்த்தி செய்ததற்காகவும் நாங்கள் பாராட்டுகிறோம். இந்தியா உடன் செமிகண்டக்டர் துறையில் ஒத்துழைக்க விரும்பும் ஜேர்மனியின் ஆர்வத்தை நாங்கள் வரவேற்கிறோம். பசுமை ஹைட்ரஜன் துறையிலும் ஒத்துழைப்பை மேற்கொள்வது தொடர்பாக இரு நாடுகளும் பரிசீலித்து வருகின்றன.

உலக பொருளாதாரத்தில் நிறைய ஏற்ற இறக்கங்களைக் காண்கிறோம். அவை, இந்தியாவும் ஜேர்மனியும், இந்தியாவும், ஐரோப்பிய ஒன்றியமும் இணைந்து செயல்படுவதற்கான தேவையை அதிகரிக்கின்றன. இந்தியா – ஜேர்மனி இடையேயான உறவு மிகவும் ஆழமானது, விரைவான வளர்ச்சிக்கு கணிசமான சாத்தியக்கூறுகள் உள்ள உறவு. இந்தியா – ஐரோப்பிய ஒன்றியம் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் ஏற்பட ஜேர்மனி முழு முயற்சிகளை மேற்கொள்ளும் என்று அமைச்சர் ஜோஹன் வதேபுல் எனக்கு உறுதியளித்துள்ளார்.

தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்துக்கான அடுத்த சுற்று பேச்சுவார்த்தை விரைவில் தொடங்கப்பட வேண்டும் என்று அமைச்சர் ஜோஹன் வதேபுல் கேட்டுக்கொண்டுள்ளார். அவரது விருப்பத்தையும் நம்பிக்கையையும் நான் பகிர்ந்து கொள்கிறேன். வரும் நாள்களில் ஒரு தீர்க்கமான முடிவை நோக்கி இது நகர வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். இது பரஸ்பர நலனுக்கு ஏற்றதாக இருக்கும். உலகப் பொருளாதாரத்தை நிலைப்படுத்த இது அவசியம்.” என்று தெரிவித்துள்ளார்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்கு சிறப்பு நிவாரண தொகுப்பு அறிவிக்க வேண்டும்

## பிரதமருக்கு ராகுல் வலியுறுத்தல்



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பஞ்சாப், ஜம்மு – காஷ்மீர், இமாச்சலப் பிரதேசம், உத்தராகண்ட் மாநிலங்களுக்கு மத்திய அரசு சிறப்பு நிவாரண தொகுப்பை அறிவிக்க வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடியை ராகுல் காந்தி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக காங்கிரஸ் மூத்த தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

“பஞ்சாபில் வெள்ளம் பேரழிவை ஏற்படுத்தி உள்ளது. ஜம்மு காஷ்மீர், இமாச்சலப் பிரதேசம், உத்தராகண்ட் மாநிலங்களின் நிலைமை மிகவும் கவலை அளிக்கிறது.

இதுபோன்ற கடினமான காலங்களில், உங்கள் கவனமும் மத்திய அரசின் தீவிர உதவியும் மிகவும் அவசியம். ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தங்கள் வீடுகள், உயிர்கள் மற்றும் அன்புக்குரியவர்களைக் காப்பாற்ற போராடி வருகின்றன.

இந்த மாநிலங்களுக்கு குறிப்பாக விவசாயிகளுக்கு உடனடியாக ஒரு சிறப்பு நிவாரண தொகுப்பு அறிவிக்கப்பட வேண்டும் என்றும், நிவாரணம் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும் எனவும் நான் கேட்டுக் கொள்கிறேன்.” என தெரிவித்துள்ளார்.



# கழுதைகள் எங்கே என்று கவலைப்படுகிறார்களா?

## தெருநாய்கள் குறித்த கேள்விக்கு கமல்ஹாசன் பதில்

கழுதைகள்எங்கேஎன்றுயாராவதுகவலைப்படுகிறார்களா? நமக்காக அது எவ்வளவு பொதி சுமந்திருக்கிறது? என்று நடிகரும் மாநிலங்களவை உறுப்பினருமான கமல்ஹாசன் கேள்வி எழுப்பியுள்ளார்.


சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்த கமல்ஹாசனிடம் தெருநாய்கள் பிரச்சினை குறித்து கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர்,

"இதற்கான தீர்வு மிகவும் சிம்பிள். உலக சரித்திரம் தெரிந்தவர்கள், சமூக சுகாதாரம் என்னவென்று தெரிந்தவர்கள் கழுதைகள் எங்கே என்று கவலைப்படுகிறார்களா? நமக்காக அது எவ்வளவு பொதி சுமந்திருக்கிறது? ஆனால் இப்போது கழுதைகளையே காணவில்லை. அதை யாராவது காப்பாற்றவேண்டும் என்று பேசினார்களா? எல்லா உயிர்களையும் காப்பாற்ற வேண்டும். எவ்வளவு முடியுமோ காப்பாற்ற வேண்டும்" என்று கமல்ஹாசன் தெரிவித்தார்.

கடந்த சில நாள்களாக இந்தியாவில் தெருநாய்க்கடி பிரச்சினை பெரியளவில் தலைதூக்கியுள்ளது. தொடர்ந்து சமூக வலைதளங்களில் நாய்க்கடி தொடர்பான காணொலிகள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தி வரும் நிலையில், அண்மையில் தனியார் தொலைகாட்சி ஒன்றில் தெருநாய்கள் பிரச்சினை தொடர்பாக நடத்தப்பட்ட விவாத நிகழ்ச்சி சமூக வலைதளங்களில் வைரலானது. இந்த நிலையில், கமல்ஹாசன் இவ்விவகாரத்தில் கருத்து தெரிவித்துள்ளார்.

# வெனிசுலா கப்பல் மீது அமெரிக்கா தாக்குதல்





## 11 பேர் உயிரிழப்பு

வெனிசுலா கடற்கரையில் போதைப்பொருள்கள் கடத்த முயன்ற கப்பல் மீது அமெரிக்க இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியதில், 11 பேர் உயிரிழந்தனர்.

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான வெனிசுலா நாட்டில் மூன்றாவது முறையாக நிகோலஸ் மதுரோ ஜனாதிபதியாக உள்ளார்.

இவர், உலகின் மிகப்பெரிய போதைப்பொருள் கடத்தல்காரர்களில் ஒருவராக செயல்படுகிறார் எனவும் போதைப்பொருள் கும்பல்களுடன் இணைந்து அமெரிக்காவிற்குள் போதைப் பொருள்களை விநியோகம் செய்கிறார் என்றும் கடந்த 2020 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குற்றஞ்சாட்டினார்.

இந்நிலையில் வெனிசுலா கடற்கரையில் ஒரு கப்பலின் மீது அமெரிக்கப் படைகள் இராணுவத் தாக்குதல் நடத்தியதில், 11 பேர் கொல்லப்பட்டனர்.

வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவுடன் தொடர்புடைய போதைப்பொருள் பயங்கரவாதிகள், சர்வதேச கடல் வழியாக அமெரிக்காவை நோக்கிப் போதைப்பொருள்களை கொண்டு சென்றபோது அவர்களைக் குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.









# அமைதி அல்லது போர் இரண்டில் ஒன்றை தேர்வு செய்ய வேண்டிய நிலையில் உலகம்

## இராணுவ அணிவகுப்பில் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் உரை

அமைதி அல்லது போர் இரண்டில் ஒன்றை தேர்வு செய்ய வேண்டிய நிலையில் தற்போது உலகம் இருக்கின்றது என இரண்டாம் உலகப் போரில் வெற்றி பெற்றதன் 80 ஆம் ஆண்டு வெற்றி விழா இராணுவ அணிவகுப்புப் பேரணியில் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் தெரிவித்துள்ளார்.

இரண்டாம் உலகப் போரின்போது ஜப்பானுக்கு எதிரான போரில் சீனா வெற்றி பெற்றதன் 80 ஆம் ஆண்டு வெற்றி விழா தலைநகர் பீஜிங்கில் உள்ள தியானன்மென் சதுக்கத்தில் நேற்று கொண்டாடப்பட்டது. மிகப் பிரம்மாண்டமான முறையில் நடத்தப்பட்ட இந்த வெற்றி விழாவில், ஜனாதிபதி ஜி ஜின்பிங்கின் அழைப்பை ஏற்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், வட கொரிய தலைவர் கிம் ஜோங் உன், இந்தோனேஷிய ஜனாதிபதி பிரபோவோ சுபியாண்டோ உள்பட பலர் கலந்து கொண்டனர்.

2015 இற்குப் பிறகு இரண்டாவது முறையாக இத்தகைய பிரம்மாண்ட வெற்றி விழா இராணுவ அணிவகுப்புப் பேரணியை சீனா நடத்தி உள்ளது. சுமார் 70 நிமிடங்கள் நடைபெற்ற இன்றைய பேரணியில் 50,000 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் பங்கேற்றனர். 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள், அணிவகுப்புப் பேரணியில் கலந்து கொண்டனர். மேலும், இதில் 100 இற்கும் மேற்பட்ட போர் விமானங்கள், ட்ரோன்கள் உள்ளிட்ட அதிநவீன இராணுவ தளவாடங்கள் பங்கேற்றன. 80,000 அமைதிப் புறாக்களும் வண்ண வண்ண பலூன்களும் வானில் பறக்க விடப்பட்டன.

மறைந்தசீனதலைவர்மா(வோ)சேதுங் அணிந்திருந்த உடையை அணிந்து கொண்டு வெற்றிப் பேரணியில் உரையாற்றிய ஜனாதிபதி ஜி ஜின்பிங்,

“இன்று மனிதகுலம் அமைதி அல்லது போர் ஆகிய இரண்டில் ஒன்றை தேர்வு செய்ய வேண்டிய நிலையில் உள்ளது. அதேபோல், வெற்றியா முழுமையான இழப்பா என்ற தேர்வையும் எதிர்கொள்கிறது. சீன மக்கள் வரலாற்றின் சரியான பக்கத்தில் உறுதியாக நிற்கிறார்கள்.” என தெரிவித்தார்.

இதேவேளை, அணிவகுப்பு தொடங்கியவுடன் ட்ரூத் சமூக ஊடகத்தில் தனது கருத்தை பதிவிட்ட டொனால்ட் ட்ரம்ப்,

சீனா ஜப்பானிடமிருந்து சுதந்திரத்தைப் பெற அமெரிக்கா உதவியதை சுட்டிக்காட்டினார். அமெரிக்காவுக்கு எதிராக சதி செய்யும் விளாடிமிர் புடின், கிம் ஜோங் உன்னுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவியுங்கள் என்றும் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, சீனாவின் வெற்றிப் பேரணி தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய டொனால்ட் ட்ரம்ப், இந்த அணிவகுப்பை அமெரிக்காவுக்கான சவாலாக நான் பார்க்கவில்லை என்றும் ஜி ஜின்பிங்குடன் மிகச் சிறந்த உறவை கொண்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.










# பாலஸ்தீனத்தை அங்கீகரிக்க பெல்ஜியம் அரசு நடவடிக்கை

பெல்ஜியம் அரசு பாலஸ்தீன அரசை அங்கீகரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காஸா மீதான இஸ்ரேல் போரில், தற்போது வரை 60,000 இற்கும் அதிகமான பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலின் தாக்குதல்களை, இனப் படுகொலை எனக் குறிப்பிட்டு ஏராளமான நாடுகளின் அரசுகள் கண்டனங்களைத் தெரிவித்துள்ளன.

ஏற்கெனவே, 140 இற்கும் அதிகமான சர்வதேச நாடுகள் பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரித்துள்ள நிலையில், அப் பட்டியலில் தற்போது பெல்ஜியமும் இணைவதாக, அந்நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர் மாக்ஸிமே ப்ரேவோட் அறிவித்துள்ளார்.

பாலஸ்தீன அரசை அங்கீகரிப்பது குறித்த பெல்ஜியமின் திட்டங்கள், வரும் செப்.9 ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் அறிவிக்கப்படும் என அவர் கூறியுள்ளார்.

இருப்பினும், காஸாவில் உள்ள அனைத்து இஸ்ரேலிய பிணைக் கைதிகள் விடுவிக்கப்பட்டு, பாலஸ்தீன கடலோரப் பகுதிகளில் அரசியல் அதிகாரத்தில் இருந்து ஹமாஸ் கிளர்ச்சிப்படை நீக்கப்பட வேண்டுமெனவும் இரண்டு நிபந்தனைகளை பெல்ஜியம் அரசு முன்வைத்துள்ளது.


இதனைத் தொடர்ந்து, இஸ்ரேல் அரசால் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்கு கரையில் உள்ள இஸ்ரேலிய குடியிருப்புகளில் இருந்து வரும் பொருள்களைத் தடை செய்யவும், ஹமாஸ் தலைவர்கள், வன்முறைக்குடியேறிகள்மற்றும்2தீவிரவலதுசாரி இஸ்ரேலிய அமைச்சர்கள் ஆகியோர் மீதும் தடைகளை விதிக்கவும் பெல்ஜியம் அரசு முடிவு செய்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இதில், தீவிர வலதுசாரி ஆதரவாளர்களான இஸ்ரேலின் பாதுகாப்புத் துறை அமைச்சர் இட்டாமர் பென் குவிர் மற்றும் நிதியமைச்சர் பெசாலெல் ஸ்மோட்ரிச் ஆகியோர் மீது தடை விதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

காஸாவில் உள்ள பாலஸ்தீனர்கள் மீதான இஸ்ரேலின் தாக்குதல்களும், ஆக்கிரமிப்பும் உடனடியாக முடிவுக்கு கொண்டுவரப்பட்டு, நிரந்தர போர்நிறுத்தம் அறிவிக்கப்படவில்லை என்றால், பாலஸ்தீனம் தனிநாடாக அங்கீகரிக்கப்படும் என பிரான்ஸ், பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.







# நிறைவேற்றப்படாத நீதியின் மீள்பரிசீலனை...

## ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலை குறித்த அறிக்கை வெளியீடு

**2025.09.08 ம் திகதி**

**பி.ப. 2.30 தொடக்கம் 5.30 வரை**

## இலங்கை மன்றக் கல்லூரியில்

**கருத்துகள்**

- சிரேஷ்ட ஊடகவியலாளர் சிவில் சமூக செயற்பாட்டாளர் **மந்தனா இஸ்மயில் அபேவிக்ரம**
- முரசு பத்திரிகையின் ஆசிரியர் **என்.வித்யாதரன்**
- பிரதம ஆசிரியர் அனித்தா பத்திரிகை **கே. டப்லியூ. ஜனரஞ்சன**

**ஊடகவியலாளர்கள் ஒருசிலரின் சுருக்கமான கருத்து கூறலுடன்**

## சகோதர உங்களை அன்புடன் அழைக்கிறோம்!

தொடர்புகளுக்கு 0763603737 | 0777234584 | 0762789001

ஏற்பாடு

අතුරුදහන්වූවන්ගේ පවුල් එකතුව
காணாமற்போனாரின் குடும்ப ஒன்றியம்
Families of the Disappeared

# செம்மணிக்கு நீதி கோரும் கையொழுத்துப் போராட்டம் கிழக்கில் மட்டக்களப்பு நகரில் இன்று தொடங்குகின்றது

## ஆதரவு வழங்குமாறு தமிழ்த் தேசியக் கட்சிகள் அழைப்பு




**(கனகராசா சரவணன்)**

செம்மணி உட்பட இலங்கையின் வடக்கு கிழக்கு மண்ணில் உள்ள மனித புதைகுழிகள் மற்றும் நடைபெற்ற இனப்படுகொலைகளுக்குமான சர்வதேச நீதி கோரிய கையொழுத்துப் போராட்டம் கிழக்கில் இன்று வியாழக்கிழமை மட்டக்களப்பு காந்திபூங்காவில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. இதற்கு மக்கள் ஆதரவு வழங்க வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்கள் அழைப்பு விடுத்துள்ளன.

மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்ற மண்டபத்தில் நேற்றுப் புதன்கிழமை மாலை இடம்பெற்ற ஊடக மாநாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், ஞா.சிறிநேசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், மு.சந்திரகுமார், கோ.கருணாகரம், கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் ஆகியோர் கலந்து கொண்டு இந்த அழைப்பை விடுத்தனர்.

இந்தக் கையொழுத்து போராட்டம் கடந்த மாதம் 29ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டு இடம்பெற்று வருகின்றது. கிழக்கில் இன்று மட்டக்களப்பு காந்தி பூங்காவில் இது ஆரம்பித்து வைக்கப்படும். அதனைத் தொடர்ந்து அம்பாறை மாவட்டத்தில் கல்முனை நகர் இராம கிருஷ்ண மிஷன் வித்தியாலயத்துக்கு அருகில் இது ஆரம்பித்து வைக்கப்படும்

அதனைத் தொடர்ந்து நாளை வெள்ளிக்கிழமை 05ஆம் திகதி திருகோணமலை மாவட்டத்தில் சிவன்கோவிலுக்கு அருகில் இந்தப் போராட்டம் ஆரம்பித்து வைக்கப்படும். இந்த கையொழுத்து போராட்டம் கிழக்கிலுள்ள அனைத்து பிரதேசங்களிலும் தொடர்ந்து இடம்பெறும்.

தமிழ் மக்கள் மீது ஓர் இனப் படுகொலை இடம்பெற்றுள்ளதுடன் அவர்களின் மொழியை அழிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு தொடர்ச்சியாக யுத்தத்தின் மூலலம் தமிழ் தேசிய இனம் இருக்க கூடாது எனப் பல படுகொலைகள் இடம்பெற்றுள்ளன. எனவே இதற்கு சர்வதேச நீதி விசாரணை வேண்டும். கிழக்கு மாகாணத்தில் பொதுமக்கள் மற்றும் போராளிகள் அதிகளவில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். எனவே இதனை சர்வதேச சமூகத்துக்கு கொண்டுபோக வேண்டும் என்ற கடமைப்பாடு எல்லோருக்கும் இருக்கின்றது. எனவே ஐ.நாவுக்கு அனுப்பும் இந்தக் கையொழுத்து போராட்த்தில் கலந்து ஆதரவு வழங்கவேண்டும் என தமிழ் தேசிய கட்சிகள் ஒன்றிணைந்து கூட்டாக அழைப்பு விடுக்கின்றோம். – என்றனர்.

# மூளையில் இரத்த கசிவால் 7 வயது சிறுவன் உயிரிழப்பு



மூளையில் ஏற்பட்ட இரத்த கசிவு காரணமாக 7 வயது சிறுவன் ஒருவன் உயிரிழந்த சம்பவம் சுன்னாகம் தெற்கு, சுன்னாகம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பத்தில் அதே இடத்தை சேர்ந்த கேதீஸ்குமார் கார்த்திகேயன் (வயது 07) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளார்.

கடந்த 31ஆம் திகதி சிறுவன் பட்டம் விட்டு விளையாடிய நிலையில் தொடர்ந்து உடல்நிலை ஏலாது இருந்ததால் சிறுவன் யாழ்ப்பாண வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை உயிரிழந்தார்.

இம்மரணம்தொடர்பில்யாழ்.போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை சுன்னாகம் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

பிரேத பரிசோதனையில் மூளையில் ஏற்பட்ட இரத்த கசிவு காரணமாக மரணம் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

# மூன்று தமிழ் நீதிபதிகள் நேற்று ஜனாதிபதி முன் பதவியேற்றனர்

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பணியாற்றிய நீதிவான்கள் மூவர் மேல் நீதிமன்ற நீதிபதிகளாக நேற்றுப் பதவி ஏற்றனர்.

யாழ்ப்பாணத்தில் மாவட்ட நீதிபதிகளாகவும் நீதிவான்களாகவும் கடமையாற்றிய ஏ.ஏ.ஆனந்தராஜா, அந்தோனிப்பிள்ளை யூட்சன் மற்றும் கஜநிதிபாலன் ஆகியோரே நேற்று மேல் நீதிமன்ற நீதிபதிகளாக ஜனாதிபதி அனுர குமார முன்னிலையில் பதவியேற்றனர். அவர்களோடு மொத்தம் 18 பேர் மேல்நீதிமன்ற நீதிபதிகளாக நேற்றுப் பத்த்இயேற்றனர்.

இவ்வாறு பதவி ஏற்றுக்கொண்டவர்கள் எதிர்வரும் 8ஆம் திகதி தமது கடமைகளைப் பொறுப்பேற்பர் எனத் தெரியவருகின்றது.











# மன்னார் நறுவிலிக்குளம் பகுதியில் 906 கிலோ கஞ்சா பொதிகள் மீட்பு

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

முருங்கன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நறுவிலிக்குளம் கடற்கரை பகுதியில் இருந்து பல கோடி ரூபா பெறுமதியான ஒரு தொகுதி கேரளக் கஞ்சா பொதிகள் நேற்றுப் புதன்கிழமை காலை மீட்கப்பட்டு முருங்கன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மன்னார் பொலிஸ் விசேட பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் முருங்கன் பொலிஸார் மற்றும் கடற்படையினருடன் இணைந்து மன்னார்-நானாட்டான் பிரதான வீதி, நறுவிலிக்குளம் கடற்கரை பகுதியில் நேற்று திங்கட்கிழமை காலை விசேட தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.



இதன் போது 25 மூடைகளில் பொதி செய்யப்பட்ட 398 சிறிய பொதிகளைக் கொண்ட கேரள கஞ்சா மீட்கப்பட்டது.

மீட்கப்பட்ட கேரள கஞ்சா 906 கிலோ எடை கொண்டது என பொலிஸார் தெரிவித்துள்ளனர். எனினும் சந்தேக நபர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா பொதிகள் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டன. கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா பொதிகளின் இலங்கை பெறுமதி பல கோடி ரூபா எனத் தெரிய வருகிறது.

மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை மன்னார் வவுனியா பிரதிப் பொலிஸ்மா அதிபர் சாமந்த விஜயசேகர முருங்கன் பொலிஸ் நிலையத்திற்கு நேற்றுப் புதன்கிழமை காலை நேரில் சென்று மீட்கப்பட்ட கஞ்சா பொதிகளை பார்வையிட்டமையுடன் பொலிஸார் மற்றும் கடற்படையினருடன் கலந்துரையாடியுள்ளார்.

# வேகக் கட்டுப்பாட்டை இழந்து கால்வாய்க்குள் பாய்ந்த ஓட்டோ

## சாரதி வைத்தியசாலையில் சேர்ப்பு!





**(தில்சாத் பர்வீஸ்)**

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வீரமுனை நூலகத்திற்கு அருகாமையில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ ஒன்று கால்வாய்க்குள் பாய்ந்து விபத்துக்குள்ளான சம்பவம் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

சம்மாந்துறை மஜீட்புரம் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய ஓட்டோச் சாரதி இந்த விபத்தில் காயமடைந்த நிலையில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# இலங்கைத் தீவில் தமிழ் இனவழிப்பின் அடையாளமே செம்மணிப் புதைகுழி!



கஜீபன் தங்கராசா

அநு அரசாங்கம் ஆட்சிப் பீடம் ஏறி ஒரு வருடம் பூர்த்தியாகும் நிலையில் தென்னிலங்கையில் ஊழல் குற்றச் சாட்டுகள் தொடர்பான விசாரணைகள் மற்றும் கைதுகள், பாதாள உலக குழுத் தலைவர்களின் கைதுகள் என்பன சூடு பிடித்து தெற்கு அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், வடக்கு – கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசத்தில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, செம்மணி சித்துப் பாத்தி மனித புதைகுழிக்கான நீதி, தையிட்டி திஸ்ஸ விகாரை விவகாரம், மன்னார் காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வு என்பன பெரும் பேசு பொருளாக மாறியிருக்கின்றன. இதில் செம்மணி சித்துபாத்தி மனிதப் புதைகுழி விவகாரம் சர்வ தேசத்தினதும் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

இலங்கையில் நடந்த உள்நாட்டு யுத்தம் மற்றும் கிளர்ச்சி காரணமாக நாட்டின் பல பகுதிகளிலும் மனிதப் புதைகுழிகள் தோற்றம் பெற்றுள்ளன. இதுவரை சுமார் 23 இற்கு மேற்பட்ட மனித புதை குழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கண்டு பிடிக்கப்படாமல் இன்னும் பல மனிதப் புதைகுழிகள் இலங்கைத் தீவு முழுவதும் காணப்படுகின்றன. இந்த நாட்டைப் பொறுத்தவரை தென்னிலங் கையில் ஜே.வி.பி. கிளர்ச்சியுடன் ஆரம்பிக்கப் பட்ட மனித புதைகுழிகள், 2009 மே 18 விடுதலைப் புலிகளுடனான யுத்தம் நிறைவுக்கு வரும் வரையில் தொடர்ந்தன. தென்னிலங்கையில் கண்டுபிடிக் கப்பட்ட மனித புதைகுழிகள் அனைத்தும் தற்போது தேசிய மக்கள் சக்தி என்னும் புதிய முகமூடியுடன் முதன் முதலாக ஆட்சிப் பீடமேறிய ஜே.வி.பி. கிளர்ச்சியின் போது காணாமல் ஆக்கப்பட்டவர்களது எனக் கருதப்படுகின்றன.

அவ்வாறே வடக்கு – கிழக்கில் காணப்படு கின்ற மனித புதைகுழிகள் அனைத்தும் விடுத லைப் புலிகளுடனான யுத்தத்தின் போது காணா மல் ஆக்கப்பட்ட தமிழ் மக்களுடையவை என கருதப்படுகின்றது. அந்த வகையில் தென்னி லங்கையில் பட்டலந்த வதை முகாம் தற்பே–ாது தேசிய மக்கள் சக்தி அரசா–ங்கத்தின் கவனத்தைப் பெற்றுள்ள–துடன், அது தொடர்பான விசாரணை களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அரசா–ங்கம் கூறுகின்றது. பட்டலந்த வதை முகா மில் ஜே.வி.பி. தோழர்களே அதிகம் சித்திர வதைக்கு உள்ளாக்கப்பட்டனர். அத னால் அரசாங்கம் அது தொடர்பில் கவனம் செலுத்தி வருகின்றது.

செம்மணி சித்துபாத்தி மயானத்தில் மே–ற்கொள்ள்பட்டு வரும் அகழ்வுகளில் இதுவரை 200 இற்கும் மேற்பட்ட மனித எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளமை யுடன், அரவணைத்த நிலையிலும் எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. பெரியவர் முதல் பால்குடி குழந்தை வரை கொல்லப்பட்டமையை அங்கு மீட்கப்பட்ட எலுப்புக் கூடுகளும் சான்றுப் பொருள்களும் வெளிப்படுத்தி நிற்கின்றன. 1998 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட யாழ்ப்பாணம் செம்மணியில் அப்போது 15 மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால் அந்த அகழ்வு தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவில்லை. அந்த அகழ்வுப் பணிகள் நிறைவுக்கு வராத நிலையில் இடைநடுவில் நிறுத்தப்பட்டது.

1995, 1996 ஆம் ஆண்டுகளில் விடுதலைப் புலிகளிடம் இருந்து அரச படையினரால் மீட்கப் பட்ட யாழ்ப்பாண குடாநாட்டில் இருந்து காணாமல் போன நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டு செம்மணி தரவையில் உள்ள புதைகுழிகளில் புதைக் கப்பட்டனர் என அப்போது கூறப்பட்டது. அங்கு சுமார் 300 முதல் 400 உடல்கள் புதைக்கப்பட்டன என கிருசாந்தி படுகொலை வழக்கில் தண்டனை பெற்றுள்ள – இராணுவத்தைச் சேர்ந்த – கோப்ரல் சோமரட்ன ராஜபக்ஷ தெரிவித்து இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. அப்போது முழுமையான அகழ்வு மேற்கொள்ளப்படாத நிலையில் தற்போது அபி விருத்தி வேலைத்திட்டத்திற்காக நிலத்தை அகழ்ந்த போது மனித எச்சங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. அத

தொடர்ச்சி ▼




# இலங்கைத் தீவில் தமிழ் இனவழிப்பின் அடையாளமே செம்மணிப் புதைகுழி!

தொடர்ச்சி▲

னைத் தொடர்ந்து தமிழ் தேசிய மக்கள் முன்னனி அதனை வெளிப்படுத்தியதையடுத்து நீதிமன்ற உத்தரவுக்கமைய செம்மணி சித்துப்பாத்தி மயானத்தில் இடம்பெற்று வரும் அகழ்வில் 200 ஐ கடந்த நிலையில் மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. தொடர்ந்து அகழ்வு இடம்பெற்றும் வருகின்றது. இதனால் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்க கூடும்.

1998 ஜூலையில் மாணவி கிருசாந்தி குமாரசாமியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி, அவரையும் அவரது குடும்பத்திரையும் படுகொலை செய்தமைக்காக இலங்கை இராணுவ வீரர் லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ உட்பட ஐவர் மரண தண்டனைத் தீர்ப்பை எதிர்கொண்டனர். குடாநாட்டில் இருந்து காணாமல் போனவர்களின் உடல்கள் அடங்கிய புதைகுழிகள் யாழ்ப்பாணத்தில் இருக்கின்றன என்ற குற்றச்சாட்டுகளை அவர் முன்வைத்தார். ராஜபக்ஷ்வும் அவரது இணைப் பிரதிவாதிகளும் இந்தக் கொலைகளுக்குப் பொறுப்பானவர்கள் எனக் கூறப்படும் 20 பாதுகாப்புப் படை வீரர்களின் பெயர்களைக் கொடுத்தனர். ஆனால் முறையான ஆய்வுகளோ, பக்கச்சார்பற்ற நீதியான விசாரணைகளோ இடம் பெறவில்லை. இதனையே செம்மணி சித்துபாத்தி புதிய மனிதப்புதைகுழி வெளிப்படுத்தி நிற்கின்றது.

தற்போதும் சோமரட்ண ராஜபக்ஷ செம்மணி தொடர்பில் சர்வதேசத்திலும் சாட்சியமளிக்க தயார் என தனது மனைவி மூலம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்காவிடம் தெரிவித்துள்ளார். 1996 ஆம் ஆண்டளவில் செம்மணி முகாம் தொடக்கம் துண்டி முகாம் வரை இடம்பெற்ற கைதுகள், படுகொலைகள் மற்றும் சடலங்கள் புதைக்கப்பட்ட இடங்கள் தொடர்பில் மரண தண்டனைக் கைதியான சோமரத்ன ராஜபக்ஷ செய்திருக்கும் முக்கிய வெளிப்படுத்தல்கள் இங்கு திட்டமிட்ட படுகொலைகள் இடம்பெற்றமையை வெளிப்படுத்தி நிற்கின்றன. இவை அங்கு மனித பேரவலம் நடந்ததை வெளிப்படுத்துகின்றன.

அந்தவகையில், தமிழ் இனத்தின் மீது திட்டமிட்டு படுகொலை புரிந்தமைக்கான சான்றாக செம்மணி சித்துபாத்தி புதைகுழி மாறியிருக்கின்றது. ஒன்றும் அறியாத பச்சிளம் குழந்தை முதல் முதியவர் வரை தமிழர் என்ற ஒரு காரணத்திற்காகவே படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டமைக்கான தடயங்கள் வெளிவந்து அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. அப்பட்டமான போர் விதி மீறலை முள்ளிவாய்கால் மண் மட்டுமன்றி செம்மணி புதைகுழியும் வெளிப்படுத்தியுள்ளது.

இதற்கு சர்வதேச கண்காணிப்புடன் கூடிய நீதியான விசாரணை இடம்பெற வேண்டும். இச்சம்பவம் இடம்பெற்ற போது யாழ் மாவட்டத்திற்கு பொறுப்பாக இருந்த படை தளபதிகள் இதற்கு பதில் அளிக்க வேண்டும். கடந்த காலங்களில் இடம்பெற்ற விசாரணைகள் போன்று செம்மணி சித்துபாத்தி விசாரணையும் கிடப்பில் போடப்படாது அது சர்வதேச சட்ட திட்டங்களுக்கு அமைவாக விசாரணை செய்யப்பட வேண்டும் என்பதுடன், அதற்கு பொறுப்பானவர்கள், துணை போனவர்கள் பாரபட்சமின்றி தண்டிக்கப்பட வேண்டும்.

கடந்த 29 ஆம் திகதி முதல் வடக்கு – கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசத்தில் செம்மணி உள்ளிட்ட மனிதப் புதைகுழிகளுக்கு சர்வதேச நீதி கோரி மாபெரும் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு இடம்பெற்று வருகின்றது. புலம்பெயர் நாடுகள் சிலவற்றிலும் செம்மணி உள்ளிட்ட

தொடர்ச்சி▲



# இலங்கைத் தீவில் தமிழ் இனவழிப்பின் அடையாளமே செம்மணிப் புதைகுழி!

தொடர்ச்சி▲

மனிதப் புதைகுழிகளுக்கு சர்வதேச நீதி கோரி போராட்டங்கள் இடம்பெற்றுள்ளமையுடன் அந்த நாட்டு தலைவர்களிடம் மகஜர் கையளிப்புக் களும் இடம்பெற்றுள்ளன. அணையா விளக்குப் போராட்டம் செம்மணிக்கு நீதி கோரி இடம்பெற்ற போது ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையா–ளரும் செம்மணி புதைகுழியை பார்த்து அஞ்சலி செலுத்தியிருநதார். அந்த மக்களின் ஏக்கங்க ளையும், வலிகளையும் புரிந்து கொண்டவராக அவர் அங்கிருந்து சென்றிருந்தார்.

ஆக, செம்மணி மனிதப் புதைகுழி என்பது தமிழ் இனத்திற்கு எதிராக இலங்கை தீவில் தொடர்ந்தும் இடம்பெற்ற, இடம்பெற்று வருகின்ற இனவழிப்பின் ஓர் அடையாளம் ஆகும். அதனை தமிழ் தலைமை களும், பாதிககப்பட்ட தமிழ் தரப்புகளும் ஒற்றுமையாக கொண்டு சென்று சர்வதேச பொறி முறை ஊடாக தீர்வுகாண முன்வரவேண்டும். அர சாங்கமும் பட்டலந்த வதை முகாமுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை சகோதர தமிழ் தேசிய இனத் தின் படுகொலைகளுக்கும் கொடுக்க வேண்டும். அதுவே பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் அரசாங் கம் மீது நம்பிக்கையை கட்டியெழுப்ப உதவும்.

சர்வதேச சமூகமும் ஒடுக்கப்பட்ட தேசிய இனத் திற்காக தமது மனச்சாட்சிகளை தட்டி எழுப்பி நீதியைப் பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும். கொல்லப்பட்டவர்களை கொண்டு வர முடியாது. ஆனாலும், குறைந்தபட்ச அந்த பரிகார நீதியே பாதிக்கப்பட்ட மக்களுக்கான ஒரு தீர்வாக இருக்கப் போகின்றது. அதன் மூலமே இந்த நாடு சுதந் திரம் பெற்ற காலம் முதல் அடக்கி ஒடுக்கப்பட்டு வரும் தமிழ் தேசிய இனமும் தன்மானத்துடன், இந்த நாட்டின் தேசிய இனமாக ஏனைய சகோதர இனங்களுடன ஒற்றுமையாகவும், ஒருவர் தோளில் ஒருவர் கைபோட்டு இதய சுத்தியுடனும் வாழக் கூடிய நிலையை உருவாக்கும். இதுவே பல்லின கலாசாரப் பாண்பாட்டைக் கொண்ட இலங்கையை முன்னோக்கி கொண்டு செல்ல வழிவகுக்கும்.



# இன்றைய ராசி பலன்கள் - 04.09.2025




இன்று நீங்கள் தேவைகளை அறிந்து நடந்து கொள்வீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். உங்களின் சிறிய திட்டம் பெரிய வெற்றிக்கு வழி காட்டும்.

உங்கள் பணிகளை விரைந்து ஆற்றுவீர்கள். உங்களிடம் இன்று ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படும்.

உங்கள் துணையுடன் தரமான நேரங்களை செலவழிப்பீர்கள். இதனால் உறவில் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று சுதந்திரமான நிதிநிலை காணப்படும். இன்று பயனுள்ள சேமிப்பு திட்டங்களில் கலந்து கொள்வீர்கள்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினைகள் ஏதும் இருக்காது. இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




இன்று உங்கள் விருப்பங்களை மேம்படுத்திக் கொள்வீர்கள். வாய்ப்புகள் கிடைக்கும். அதை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்வீர்கள்.

பணியில் உங்கள் செயற்றிறனை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் திறமைகள் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த முயல்வீர்கள்.

இன்று சுதந்திரமான நிதிநிலை காணப்படும். இன்று வளமான நாளாக அமையும்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினைகள் ஏதும் இருக்காது. இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




இன்று நீங்கள் பதற்றம் நிறைந்து காணப்படுவீர்கள். இது உங்கள் பேச்சில் வெளிப்படும். பிரார்த்தனை மற்றும் மந்திர ஜெபங்கள் மன ஆறுதலை அளிக்கும்.

பணியில் கூடுதல்பொறுப்புகள் சுமக்க நேரும். வேலை சம்பந்தமான பயணம் காணப்படும்.இன்று உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி பணிகளைக் கையாள வேண்டும்.

உறவில் நல்லிணக்கம் பராமரிக்க அகந்தைப் போக்கை கவனமாகக் கையாள வேண்டும். உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக செலவுகள் அதிகமாக இருக்கும். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.




நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரும். உங்கள் மதிப்பு மிக்க பொருளை இழக்க நேரலாம். கவனமாக இருக்கவும். இன்று திருப்தியான மன நிலை இருக்காது. அது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. கவனமுடன் உங்கள் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் பதற்ற உணர்வை வெளிப்படுத்துவீர்கள். இதனால் வாக்குவாதம் எழும். இந்த நடத்தையை கைவிடுங்கள்.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். சிறப்பாக திட்டமிடுவதும் அதனை செயலாற்றுவதும் இன்று வெற்றியை பெற்றுத் தரும்.

உங்கள் தாயின் உடல் நலம் பற்றிய கவலை காணப்படும்.




இன்று அமைதி மற்றும் செழிப்பு காணப்படும் அனுகூலமான நாள். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நன்மை அளிக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளுக்கு பாராட்டு கிடைக்கும். சக பணியாளர்கள் ஒத்துழைப்பார்கள்.

உங்கள் தொடர்பாடல் மூலம் உங்கள் துணையிடம் நல்லுறவை ஏற்படுத்துவீர்கள்.

நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. புதிய முதலீட்டிற்கான திட்டம் இன்று நீங்கள் மேற்கொள்ளலாம்.

உங்களிடம் காணப்படும் நேர்மறை ஆற்றல் காரணமாக இன்று ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்கும் நாள். சவால்கள் நிறைந்து காணப்பட்டாலும் அதனை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்வீர்கள். பயணங்கள் செல்ல வாய்ப்புள்ளது.

உங்கள் பணிகளை ஒரு கொள்கையுடன் மேற்கொள்வீர்கள். அது வெற்றிக்கு வழி வகுக்கும்.

உங்கள் துணையிடம் இனிமையாக நடந்து கொள்வீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும்.

பயணம் மூலம் இன்று பண வரவு ஏற்படலாம். ஆன்மீக விஷயத்திற்காக செலவு செய்ய நேரலாம்.

இன்று உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




அதிக சிந்தனைகள் காரணமாக மனதில் குழப்பம் ஏற்படலாம். இன்று வெற்றிகள் காண கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய முடியாதபடி சில தடைகள் ஏற்படும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடத்தில் கடினமான சூழ்நிலையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் குறைந்த அளவு பேச்சு வைத்துக் கொள்ளுங்கள். உறவில் அமைதியின்மை ஏற்படாமல் இருக்க இது மிகவும் அவசியம்.

போதிய பணம் கையில் இருந்தாலும் அதனை நீங்கள் பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்ய இயலாது. வீண் செலவு ஏற்படும்.




இன்று மிதமான பலன்களே கிடைக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய நேர்மறை எண்ணங்களுடனான அணுகுமுறை கொள்ள வேண்டும்.

கவனக் குறைவு காரணமாக பணியில் சில தவறுகளை நீங்கள் செய்ய நேரலாம். உங்கள் பொறுப்புகளை அறிந்து நடந்துகொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் நட்பாக மனம் திறந்து பேசுங்கள். இதனால் உறவுப் பிணைப்பு வலுப்படும்.

செலவுகள் அதிகரிக்கும். வீணான செலவுகள் உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.சளி மற்றும் இருமல் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவு வகைகளை மேற்கொள்வதை தவிர்க்க வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 04.09.2025




இன்று உங்கள் இலக்குகள் நிறைவேறும். என்றாலும் முறையாக திட்டமிட்டால் இன்னும் சிறபான பலன்களைக் காணலாம்.

பணியில் உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்கும். கூடுதல் ஊக்கத் தொகை அல்லது சலுகைகள் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

இன்று உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். திருமண நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதன் மூலம் இருவரும் மகிழ்ச்சியாக நேரம் கழிப்பீர்கள்.

இன்று வலுவான நிதி ஆதாரங்களை அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் சேமிப்பு ஆற்றலும் அதிகரிக்கும்.

உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இதனால் இன்று நீங்கள் துடிப்புடன் உற்சாகமாக இருப்பீர்கள்.




இன்று நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். உங்களிடம் உறுதியும் தைரியமும் காணப்படும். உங்கள் இலக்குகளை அடைவது இன்று எளிதாக இருக்கும்.

உங்கள் பணியில் வளர்ச்சி காண்பீர்கள். இன்று உங்களுக்கு நிறைய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் இனிமையாகப் பழகுவீர்கள். இதன் மூலம் குடும்பத்தில் உள்ள பிரச்சினைகள் தீரும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகள் பூர்த்தி ஆகும். நீங்கள் சிறிய வகையிலான கடன்கள் வாங்குவீர்கள்.

ஆரோக்கியமான மனதின் காரணமாக தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். எனவே உற்சாகமாக ஆற்றலுடன் இருங்கள்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். உங்கள் இலக்குகளை அடைய கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் இலக்குகளை அடைவதற்கு அதைரியம் தடையாக இருக்கும்.

பணியில் கவனம் செலுத்த முடியாதபடி பதற்றம் காணப்படும். அமைதியாக பணிகளை மேற்கொண்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

உங்கள் துணையுடனான கருத்து வேறுபாடு காரணமாக உறவில் அமைதியின்மை காணப்படும். இதனை சமாளிக்க வேண்டும்.

எதிர்பாராத செலவினங்கள் காணப்படும். உங்கள் நிதியை கவனமாகக் கையாள வேண்டும்.

நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சினை காணப்படும். ஓய்வெடுக்க நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.




ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் மன ஆறுதலும் வெற்றியும் கிட்டும். இன்று வெற்றி காண யோசித்து செயல்பட வேண்டும்.

பணியின்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. பணியில் கவனம் செலுத்த உங்கள் மனதில் உள்ள தேவையற்ற எண்ணங்களை நீக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவில் அமைதியின்மை காணப்படும். உங்கள் துணையுடன் அன்பாக நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று வரவு செலவு இரண்டும் காணப்படும். இன்று அதிக பண வரவுக்கான சாதகமான நாள் அல்ல.

அதிக உடல் உழைப்பு காரணமாக கால் வலி ஏற்படலாம். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

# காணிகளை விடுவிப்போம் என்கிறார் அநுர அவற்றில் கட்டுமானம் செய்கிறது ராணுவம்






**(ந.லோகதயாளன்)**

வலி. வடக்கில் உள்ள மக்களின் நிலங்கள் விடுவிக்கப்படும் என ஜனாதிபதி கூறிய இரு தினங்களில் மக்களின் நிலத்தில் படையினர் கட்டுமானத்தில் ஈடுபடுகின்றனர்.

இம் மாதம் முதலாம் திகதி யாழ்ப்பாணம் வருகை தந்த ஜனாதிபதி மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும்போது படையினர் வசம் உள்ள மக்களின் நிலங்கள் விடுவிக்கப்படும் என உறுதியளித்தார்.

இவ்வாறு ஜனாதிபதி உரையாற்றிய பின்பும் வலி. வடக்கில் பலாலி வீதியில் வசாவிளான் பகுதியில் இராணுவக் குடியிருப்பு என உள்ள பிரதேசத்தின் உள்ளே புதிதாக விடுவிக்கப்பட்ட வீதியோரம் கட்டுமானம் இடம்பெறுகின்றது.

தேர்தல் காலத்தில் முழுமையாக திறக்கப்பட்ட பலாலி வீதியூடான போக்குவரத்து அனுமதிக்கப்பட்ட பின்பு தற்போது புதிய கட்டுமானம் இடம் பெறுகின்றது.

புதிய கட்டுமானம் இடம்பெறும் நிலத்தின் உரிமையாளர் நேற்றைய தினம் அப்பகுதிக்குச் சென்று பார்வையிட்ட பின்னர், தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காவும் முன்னைய ஜனாதிபதிகள் போன்றே பொய்யுரைக்கின்றார் என எண்ணத் தோன்றுகின்றது என்றார்.